செ. கு. எண்:273 நாள்:11.10.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.10.2013

சென்னை, பெருநகரக் காவல், சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.பெரியசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 22.8.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.சிவாஜி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 27.8.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.சுரேஷ் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 29.8.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.அன்பழகன் அவர்கள் 26.8.2013 அன்று சிதம்பரம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 30.8.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், அடையாறு காவல் நிலைய போக்குவரத்து புலனாய்வு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.விஜயகுமார் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 30.8.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்போர் திரு. K.தனவேல் அவர்கள் 30.8.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், செங்குன்றம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. D.செந்தில்குமார் அவர்கள் 31.8.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பெரியசாமி, சிவாஜி, அன்பழகன், விஜயகுமார்; தலைமைக் காவலர் சுரேஷ்; முதல்நிலைக் காவலர் செந்தில்குமார்; தீயணைப்போர் தனவேல் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பெரியசாமி, சிவாஜி, விஜயகுமார்; தலைமைக் காவலர் சுரேஷ்; மாரடைப்பால் காலமான காவல் துறை முதல் நிலைக் காவலர் செந்தில்குமார்; தீயணைப்போர் தனவேல்; சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் அன்பழகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**